



LAW & SOCIETY TRUST

## ஜனநாயகக் கலந்துரையாடல், முனைப்பான செவிமடுத்தல் மற்றும் உள்ளடங்கலான பிரசைகள் பங்கேற்பு: பெருந்தொற்றின்போதும் சமூக நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்கல்

இலங்கை முகங்கொடுக்கும் பெருந்தொற்றின்போதும் சமூக பொருளாதார நெருக்கடியின்போதும் உள்ளடங்கலான குடிமைப் பங்கேற்புக்கான தளங்களை உருவாக்குவதும் ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் அரச பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதும் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஈடுபாடுமிக்க பிரசைகள் என்ற ரீதியில், நெருக்கடிக்கான அரசாங்கத்தின் பதிற்செயற்பாடுகள் அரசியலமைப்பியலின் கோட்பாடுகளுக்கு இயைபுறுகின்றது என்பதையும் அரசாங்கம் அதிலிருந்து விலகுமிடத்து அவை கட்டுப்படுத்தப்படுவதையும் தவறான தகவல்களும் வெறுப்பினைப் பரப்பலும் தடுக்கப்பட்டு மாற்றத்தை உருவாக்குவோர் மற்றும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்கள் ஆகியோரின் நேர்மறையான ஈடுபாட்டின் மூலம் சமூக ஒற்றுமை வலுப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு, சுகாதார மற்றும் பொருளாதாரச் சவால்களுக்கான அரசாங்கத்தின் துரித பதிற்செயற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற கொள்கை விடயங்கள் மீதான பகிரங்கக் கலந்துரையாடலொன்றை மேம்படுத்துகின்ற, அடிப்படை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துகின்ற ஜனநாயக விழுமியங்களிலும் அரசியலமைப்புக் கோட்பாடுகளிலும் அடிப்படை உரிமைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உருவாகிவரும் விடயங்கள் பற்றிப் பிரசைகளுக்கு உரிய நேரத்தில் உண்மைகளின் அடிப்படையிலான தகவல்களை வழங்குகின்ற உத்தியோகபூர்வமற்ற ஒரு ‘‘குடிமைக் கண்காணிப்பினைக்’’ கருத்திட்டம் உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலுப்படுத்துவதற்காக ஆதரித்துவாதாடல் பிரசாரங்களை மேற்கொள்வதையும் அத்துடன் பெருந்தொற்றுக்குப் பின்னரான சூழமைவில் பிரசைகள் தங்களின் தேவைகள், பதகளிப்புக்கள் மற்றும் அபிலாசைகளை வெளிப்படுத்துவதை இயலச் செய்யும் ஒரு தேவைகள் மதிப்பீட்டினை நடத்துவதையும் கருத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையானது கருத்திட்டத்துக்கான ஒரு பங்களிப்பாக, சட்டத்தரணியும் சைல்ட் புரட்டக்சன் போர்ஸ் (உத்தரவாத லிமிடட்) இலங்கை ஸ்தாபகருமான மிலானி சல்பிடிகோரல அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தில் அவர்களின் ஈடுபாட்டினை சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை (LST) மெச்சுகின்றது. இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் எல்எஸ்டி சபையினதோ அல்லது முகாமைத்துவத்தினதோ கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை.

**முகப்பு கலை: சங்கீத் மதுரவல**

# பெருந்தொற்றின் போது சிறுவர்களின் உரிமைகளை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றிப் பேசுவோம்

## *அறிமுகம்*

இலங்கைச் சட்டத்தினாலும் சர்வதேச சமவாயங்களினாலும் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாகப் பல வழிகளில் சமரசம் செய்யப்பட்டுள்ளன. நாட்டினைப் பெருந்தொற்றுச் சூழ்ந்திருந்த காரணத்தினால், மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். இவ்வாறான முடக்கத்துடன், தொழில் இழப்பு, வருமான இழப்பு மற்றும் அடிப்படை வளங்களை அணுக முடியாமை போன்றவையும் சேர்ந்துகொண்டதால் குடும்பங்களில் மேலதிக மன அழுத்தங்கள் உருவாகின. பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் தங்களின் விரக்தியினைத் தங்களின் பிள்ளைகளின் மீதும் வாழ்க்கைத்துணைகளின் மீதும் அல்லது தங்களின் துணைகளின் மீதும் கொட்டித் தீர்த்தனர். சிறுவர்கள் வீடுகளுக்குள் அடைபட்டிருந்தனர். இந்தக் காலப்பகுதியில் அவர்களினால் தரமான கல்வியினைப் பெற முடியவில்லை, நண்பர்களைச் சந்திக்க முடியவில்லை அத்துடன் உடற்பயிற்சி செய்யவும் விளையாடவும் முடியவில்லை. பல சிறுவர்களின் போஷாக்கு மட்டங்களிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. குடும்பங்களின் புகலிடமாக இருக்கவேண்டிய வீடு மூச்சுத் திணறவைக்கும் சிறையாக மாறியதுடன் அங்கே துஷ்பிரயோகமும் வழமையான நிகழ்வாக மாறியது.

கொவிட் 19 பெருந்தொற்று அனைவரின் மீதும் குரூரமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாகச் சிறுவர்கள் மீது அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கணிப்பீட்டுக்குப் பதிலளித்தவர்களில் 76.8 வீதமானோர் வாய்மூலமான துஷ்பிரயோகங்களை அனுபவித்த அதேவேளை 7.8 வீதமானோர் உடல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கும் 5.6 வீதமானோர் பாலியல் வன்முறைக்கும் உட்பட்டுள்ளனர். இவ்வாறான குற்றங்களை நிகழ்த்தியவர்களில் 49 வீதமானோர் அயலவர்கள் என்பதையும் 25வீதமானோர் பெற்றோர்கள் என்பதையும் 24 வீதமானோர் நெருங்கிய துணைவர்கள் என்பதையும் புள்ளிவிபரங்கள் வெளிக்காட்டுகின்றன. [1] எவ்வாறாயினும், குடும்ப வன்முறைச் சம்பவங்களில் அதிகமானவை முறைப்பாடு செய்யப்படாமல் போவதால் இந்த எண்ணிக்கைகள் உண்மை நிலையினைக் காட்டவில்லை என்பதைச் சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அறிந்துள்ளனர். குடும்பத்தினுள் நடைபெறும் வன்முறையினைப் பற்றிக் கலந்துரையாடுவதும் முறைப்பாடு செய்வதும் கலாசார ரீதியாகத் தடுக்கப்பட்ட விடயங்களாக இருப்பதால் நீண்ட காலம் நடைபெறும் மோசமான மீறல்களும் துஷ்பிரயோகங்களுமே முறைப்பாடு செய்யப்படலாம். எனவே, கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியின்போது இடம்பெறும் குடும்ப வன்முறை தொடர்பான தரவுகள் பூரணமற்றவையாக உள்ளன. மேலும், சமூக சேவைகளை அணுகுவதை முழுமுடக்கம் கடினமாக்கியுள்ளது.

## *இலங்கைச் சிறுவர்கள் யார்?*

''பிள்ளை'' என்பது யார் என்பது தொடர்பான வரைவிலக்கணம் இலங்கைச் சட்டத்தில் மாறுபடுகின்றது என்பது ஆரம்பத்தில் கருத்தில் கொள்ளப்படவேண்டும். *சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின்* 1 ஆம் உறுப்புரையின் கீழான வரைவிலக்கணத்தின் படி ''பிள்ளை என்பதன் பொருள் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு மனிதருமாகும்.'' இதேபோன்று,*2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவையில் (திருத்தம்)* ''பிள்ளை'' என்னும் சொற்பதம் ''*பதினெட்டு வயதுக்குக் குறைவான நபரைக்''* குறிக்கின்றது. ஆயினும், சில சட்டங்களில் ''பிள்ளை'' என்பது ''*பதினான்கு வயதுக்குக் குறைவான நபர்''*என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சட்டம் மற்றும் சர்வதேசச் சட்டம் ஆகிய இரண்டுக்கும் இடையில் ஒத்திசைவினைப் பேணுவதற்காக, இந்த அத்தியாயத்தில் ''பிள்ளை'' என்பது பதினெட்டு வயதுக்குக் குறைவான தனிநபரைக் குறிக்கும். இந்த அத்தியாயம் முழுவதும் பிள்ளை ஒருவருக்கு உரித்தான அனைத்து உரிமைகளும் சட்டத்தினால் பற்றிப்பிடிக்கப்படுபவையும் இந்த அடிப்படையில் இருந்தே கையாளப்படும். இது பாதுகாப்பு, புகலிடம், போஷாக்கு, பராயமடையாதவர்களுக்கான நீதி ஆகியவற்றிற்கான பிள்ளை ஒருவரின் உரிமைகளையும் இன்னும் அதிகமானவற்றையும் உள்ளடக்கும்.

## *பாதுகாப்பு மற்றும் புகலிடம்*

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 27(13) ஆம் பிரிவின் கீழ் ''பிள்ளைகளினதும் இளம் ஆட்களினதும் உடல் வளர்ச்சியை, உள வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும் சுரண்டலிலிருந்தும் ஓரங்காட்டப்படுவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் என அவர்களின் நலன்களை விசேட கவனத்துடன் மேம்படுத்துவதற்குமான''*வாக்குறுதியினை நாடு வழங்கியுள்ளது. மேலும், இலங்கை தண்டனைச் சட்டக் கோவை மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் போன்ற சட்டச் சட்டகங்கள் பாதுகாப்புக்கான பிள்ளையின் உரிமையினைப் பாதுகாக்கின்றன. இந்த விழுமியம் நாடு பற்றிப் பிடிக்கவேண்டிய அடிப்படைக் கடப்பாடாகும். ஆனால் பெருந்தொற்றுப் பரவலின் போது இதுவே குறிப்பிட்ட கரிசனைக்குரிய உரிமையாகக் காணப்படுகின்றது.

''சிறுவர்களுக்கு எதிரான வன்முறையினைத் தடுத்தல் பற்றிய உலகளாவிய நிலை அறிக்கை 2020'' என்னும் தலைப்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை, சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக உதவி பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புத் தொடர்பாகக் கரிசனை வெளியிட்டுள்ளது. அழைப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள ஏதாவது குறைவுக்கு

சாத்தியமான காரணம், குடும்பங்களில் நிகழும் துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கையில் உண்மையில் ஏற்படும் குறைவு அல்ல என்றும் துஷ்பிரயோகத்தினை ஆசிரியர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் போன்ற 3 ஆம் தரப்பினர் உண்மையிலேயே அடையாளம் காண்பதற்கான ஆற்றலில் ஏற்பட்டுள்ள குறைவே அதற்கான காரணம் என்றும் ஆய்வு மேலும் கருத்து வெளியிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில் 2020 ஆம் ஆண்டின் முதல் 15 நாட்களில் 54 இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளமை இந்த விடயத்தினை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது.[2]உண்மையில் நிலவுகின்ற சம்பவங்களின் எண்ணிக்கையினை விட முறைப்பாடு செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் எழுப்பப்பட்ட கரிசனைகளைத் தொடர்ந்ததான விடயங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கும் இலங்கையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு முகவராண்மைக்கும் இடையிலான ஊடக வெளியீடு சமர்ப்பித்துள்ளது.[3]மார்ச் 16 ஆம் திகதிக்கும் ஏப்ரல் 7 ஆம் திகதிக்கும் இடையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 என்னும் உதவிக்கான தொடர்பு இலக்கத்திற்குக் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 40 வீதத்தினால் அதிகரித்துள்ளது என அது குறிப்பிட்டுள்ளது. கிடைத்த 292 முறைப்பாடுகளில், சிறுவர்களைக் குரூரமாக நடத்துவதுடன் தொடர்புடைய 121 முறைப்பாடுகள் உள்ளடங்கி யிருந்தன. முன்பு குறிப்பிட்டதைப் போல், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களின் உண்மையான எண்ணிக்கையும் முறைப்பாடு செய்யப்படும் சம்பவங்களின் எண்ணிக்கையும் வித்தியாசமாக இருப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. இது மிக உயர்வாகக் காணப்படலாம். ஏனெனில் சிறுவர்களினால் துஷ்பிரயோகங்களைப் பாதுகாப்பாக முறைப்பாடு செய்ய முடியாமல் இருக்கலாம் அல்லது தமக்கு இழைக்கப்படுவது துஷ்பிரயோகம் என்பதையும் பாதுகாப்பு மற்றும் இடரின்மைக்கான தமது உரிமை மீறல் என்பதையும் சிறுவர்கள் அடையாளம் காண முடியாமல் இருக்கலாம். பொதுச் சுகாதார அவசரநிலைமைகளின் போது துஷ்பிரயோகங்கள் (சிறுவர்/வீட்டு) அதிகரிக்கின்றன எனக் காட்டும் தற்போதுள்ள ஆய்வினால் இது ஆதாரப்படுத்தப் படுகின்றது.[4]பயங்கரமான வைரசில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு உலகமே முழுமுடக்கத்தில் இருக்கையில் சிறுவர்கள் அவர்களின் வீடுகளில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர் - அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம் எனக் கருதப்படும் இடத்தில் அவர்களைப் பாதுகாக்கவேண்டியவர்கள் என எதிர்பார்க்கப்படுபவர்களினாலேயே துஷ்பிரயோகம் நிகழ்கின்றது.

இந்தப் பெருந்தொற்றின் போது சிறுவர்களுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது. மேலும் அவ்வாறான விசேட கவனத்திற்கான அருகதை அவர்களுக்கு உண்டு. சிறுவர்களினால் அவர்களின் நண்பர்கள், ஆசிரியர்கள் அல்லது சமூகத்தின் நம்பிக்கைக்குரிய உறுப்பினர்கள் போன்ற சாதாரண நேரத்தில் உதவியினையும் பாதுகாப்பினையும் வழங்கக்கூடிய வளங்களை அணுக முடியாத காலமாக இது இருக்கின்றது. அச்சம் மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவற்றின் அதிகரித்த மட்டங்களையும் வாழ்வாதார இழப்பினையும் ஸ்திரமற்ற பொருளாதாரத்தினையும் உருவாக்கியுள்ள பெருந்தொற்று, மிகவும் சடுதியாக ஒவ்வொருவரதும் வேலைச் சூழல்களையும் வாழ்க்கைச் சூழல்களையும் புரட்டிப் போட்டுள்ளது. ஆயினும், அதிர்ச்சியளிக்கும் வீதத்தில் சிறுவர்கள் ஏன் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர் என்பதை விளக்குவதற்கானசாத்தியமான காரணிகளாக இவை இருந்தாலும் கூட இவை ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களாக அமையாது. சமூகத்தில் உயிர் வாழ்வதற்கு ஒருவர் மற்றொருவரில் தங்கியிருக்கவேண்டிய காலகட்டத்தில், எமது சமூகத்தில் மிகவும் பாதிப்புறுநிலையில் உள்ள சிறுவர்கள் துஷ்பிரயோகத்தின் மிகக் கொடூரமான வடிவங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

**தனியார் வைத்தியசாலையொன்றின் மனிதவள முகாமையாளர் ஒருவரின் வாக்குமூலம் - கொழும்பு (ஆண், 30 வயது, பெல்மதுளை)**

*''பெருந்தொற்றின் காரணமாக மக்களின் நாளாந்த வாழ்வு தலைகீழாக மாறிவிட்டது. பாடசாலை செல்லும் பிள்ளைகளை எடுத்துக்கொண்டால், அவர்களுக்குப் பாடசாலை செல்ல முடியாதுள்ளது. அவர்கள் ஒன்லைன் கல்வியில் மூழ்கி அவர்களின் அதிக நேரத்தினை வீட்டிலேயே கழிக்கின்றனர். ஒரு வகையில் நோக்கினால், அவர்களுக்குப் பெற்றோரிடம் இருந்தும் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்தும் அதிக அன்பு கிடைக்கின்றது. ஆனால் பாடசாலை செல்லும் வயதுப் பிள்ளைகள் அவர்களின் சக மாணவர்களுடன் நேரம் செலவழிக்க வேண்டும். இந்த அம்சம் இவர்களின் வாழ்வில் முழுவதும் இல்லாமலாகியுள்ளது. விளையாட்டுக்களையும் அழகியற்கலைகளையும் பல கூட்டுச் செயற்பாடுகளையும் நடத்துவதும் அசாத்தியமாகியுள்ளது. ஒன்லைனில் கற்கும் முறை வித்தியாசமாகவுள்ளதுடன் இது மாணவர்களின் மத்தியில் அழுத்தத்தினையும் அதிகரித்துள்ளது.''*

சிறுவர்கள் அதிகரித்த விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் பெருந்தொற்று வழியேற்படுத்தியுள்ளது. நிகழாமல் தடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப் படவேண்டும் என்பதுடன் பாதிக்கப் பட்டவர்கள் மனப் பாதிப்பில் இருந்து வெளிவர உதவுவதற்கு வளங்கள் தேவைப்படுகின்றன. நிச்சயமற்ற நிலை அதீத மட்டங்களில் நிலவும் சூழலில், முன்னெப்பொழுதும் முகங் கொடுக்காத ஒரு காலப்பகுதிக்கு நாடு முகங்கொடுத்து வருகின்றது. ஆனால் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றினை அமுலாக்குவதில் கணிசமான அளவு அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

## *கல்வி*

''*எழுத்தறிவின்மையினை முற்றாக இல்லாதொழித்தலும் எல்லா நிலைகளிலும் உலகளாவியதும் சமத்துவமானதுமான கல்வி வாய்ப்புக்கான உரிமையை எல்லாப் பிரசைகளுக்கும் உறுதிப்படுத்தல்''*அரசின் குறிக்கோள்களில் ஒன்று என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 27 (2) (ஏ) பிரிவு குறிப்பிடுகின்றது. மேலும், சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தினை நாடு 1991 ஆம் ஆண்டில் ஏற்று அங்கீகரித்துள்ளதுடன் சமவாயத்தின் 28 ஆம் உறுப்புரைக்கு அமைவாக கல்விக்கான பிள்ளையின் உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒரு மனித உரிமையாகவும் நாட்டின் இன்றியமையாத கடப்பாடாகவும் கல்வியின் முக்கியத்துவத்தினை நாட்டின் சட்டம் மீண்டும் மீண்டும் அங்கீகரித்துள்ளது.

**சுயதொழில் புரியும் / நாட்கூலியாக வேலைசெய்யும் ஒருவரின் வாக்குமூலம் (பெண், 49 வயது, ஹிரிபிடியாகம, அநுராதபுரம்)**

*''எனது இரண்டு மகன்களும் அவர்களின் பாடசாலைக் கல்வியினை முடித்துவிட்டனர். ஆனால், எனது மகள் இன்னும் பாடசாலை செல்கிறார். தற்போது அவர் 7 ஆம் தரத்தில் கற்கின்றார். பெருந்தொற்றின் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்ட பின்னர் அவருக்குள்ள பிரதான மாற்று வழியாக ஒன்லைன் கல்வி அமைந்துள்ளது. அதற்கு வசதி வழங்குவதற்கு நாங்கள் பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்தோம். ஏனெனில் எங்களில் எவரிடமும் அன்ட்ரொய்ட் தொலைபேசி இல்லை. அதுதான் ஒன்லைன் கல்விக்கான அடிப்படைத் தேவை. இந்தச் சிரமங்களைப் பற்றி யாரும் கவனம் எடுக்கவில்லை. கிராமத்தில் உள்ள மக்களில் அதிகமானவர்களுக்கு இது ஒரு பொதுவான பிரச்சினையாக உள்ளது. ஆசிரியர்கள் தாம் எப்போதுமே ஒன்லைன் வகுப்புக்களை நடத்துவதாகக் கூறுகின்றனர். ஆனால் இந்தச் சிரமங்களை யாரும் கோடிட்டுக்காட்ட விரும்பவில்லை. உண்மையில், இந்த வருடம், எனது மகள் 8 ஆம் தரத்தில் இருக்கவேண்டும். ஆனால் அவரால் 7 ஆம் தரத்தினையே இன்னும் பூர்த்திசெய்ய முடியவில்லை. பரீட்சைகள் எவையும் உரிய முறையில் நடத்தப்படவில்லை. மேலும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் 5 ஆம் தர மாணவர்கள், 11 ஆம் தர சாதாரண தர மாணவர்கள் 13 ஆம் தர உயர்தரப் பரீட்சை மாணவர்கள் ஆகியோர் இந்த முக்கியமான கல்விக் கட்டங்களைத் தாண்டுவதில் பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இவர்களில் சிலர் இப்போது இவற்றினைக் கைவிட்டுள்ளனர். மேலும், சில ஆசிரியர்களுக்கு உரிய தொழில்நுட்பம் பற்றித் தெரியாமல் உள்ளது''.*

பெருந்தொற்றுக்கான இயல்பான பதிற்செயற்பாடாக ஒன்லைன் கல்வியினை நோக்கி நகர்ந்தமை காணப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த நகர்வானது ஒன்லைன் கல்வியினை அணுகுதல் தொடர்பில் பல பிரச்சினைகளைக் கொண்டிருந்தது. ஆசியாவிலும் குறைந்த வருமானம் பெறும் நாடுகளிலும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப அணுகல் மற்றும் பாவனை பற்றிய After Access அறிக்கையில், 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் 15 வயதுக்கும் 56 வயதுக்கும் இடைப்பட்ட தனிநபர்களில் 78 வீதமானவர்களுக்குச் சொந்தமாக கையடக்கத் தொலைபேசி உள்ளது எனவும் ஆனால் 12 வீதமானவர்களிடம் மட்டுமே மடிக்கணனி உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 34வீதமானவர்களுக்கு மாத்திரமே இன்டர்நெட் இணைப்பு இருப்பதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரான ஜோசப் ஸ்டாலின் கோடிட்டுக் காட்டியுள்ளதுடன் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் 60 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஒன்லைன் கல்விக்கான அணுகலைப் பெறவில்லை

எனவும் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகள் இன்டர்நெட் இணைப்பினைப் பெற்றுத் தமது கல்வியினைப் பெறுவதற்கு மரங்களிலும் குன்றுகளிலும் மர வீடுகளிலும் ஏறவேண்டியிருந்ததைக் காட்டும் படங்கள் காணப்பட்டன. தொழில்நுட்பத்திற்கும் இன்டர்நெட்டுக்கும் அணுகலைக் கொண்டிருப்பவர் களுக்கும் அதற்கான தேவை இருந்தும் அவற்றுக்கான அணுகல் இல்லாதவர்களுக்கும் இடையில் பாரிய டிஜிட்டல் இடைவெளி ஒன்று தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இந்தக் காலகட்டத்தில் பிள்ளைகள் பெறுகின்ற கல்வியின் தரம் தொடர்பாகவும் பிரச்சினைகள் காணப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னெடுப்பான டிவலப்மன்ட் ஆசியா வெளியிட்ட கட்டுரையொன்றில் 2020 ஆம் ஆண்டில் 4 வீதமான ஆசிரியர்களே ஞுழழஅ மற்றும் மைக்ரோசொப்ட் டீம்ஸ் போன்ற தளங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் அதேவேளை 41 வீதமானவர்கள் பிள்ளைகளுடன் பாடக்குறிப்புக்களைப் பகிர்ந்துகொள்ள வட்ஸ்அப் மற்றும் வைபர் போன்றவற்றினைப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது. அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரே தரத்திலான கல்வியினை வழங்குவதில் காணப்படும் சவால்களை இது எடுத்துக்காட்டுகின்றது. சில பிள்ளைகள் அவர்களின் ஆசிரியர்களிடம் இருந்து ஒருவழித் தொடர்பாடலைப் பெறுகின்றனர். இது இளம் பிள்ளைகளை ஊக்குவித்துத் தூண்டும் சாத்தியமற்றதாகும்.

அண்மையில் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் முன்னெடுத்த வேலை நிறுத்தத்தினால் மானவர்களின் கல்விக்கான அணுகல் மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தினைத் தொடர்ந்து, உயர் கல்விக் கற்கைநெறிகளை நடத்துவதற்கு இராணுவ நிறுவனம் ஒன்றினை அனுமதிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த 22 தொழிற்சங்கவாதிகள் கைது செய்யப்பட்டு குவரண்டைனுக்கு அனுப்பப்பட்டனர். காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எனவும் ஒன்லைன் பாடம் நடத்துவதில் இருந்தும் வாபஸ் பெறுவது எனவும் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானமானது மேலும் அதிக மாணவர்களை எவ்வடிவிலுமான கல்விக்கான அணுகல் அற்றவர்களாக ஆக்கியுள்ளது.

அடிப்படைக் கல்வியினை அணுகுவதற்கான இந்த இடையூறுகளும் சிரமங்களும் பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டதும் மாணவர்கள் பாடசாலைக்கு மீண்டும் வராமல் இருப்பதற்கு அவர்களைத் தூண்டலாம். கீழ் மட்டப் பொருளாதார நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் குடும்ப வருமானங்களின் குறைநிரப்பலுக்காகத் தொழில் செய்ய ஆரம்பித்துள்ளனர் அல்லது குடும்பப் பராமரிப்பாளர் என்னும் வகிபங்கினை வகிக்க ஆரம்பித்துள்ளனர். இதனால் பாடசாலைக்குச் செல்லும் வழமைக்கு மீண்டும் திரும்புவது இவர்களுக்கு மிகவும் சிரமம் மிக்கதாக இருக்கலாம். பாடசாலை முறைமையில் இருந்து மாணவர்கள் இடைவிலகும் வீதமும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது.

## சுகாதாரம் மற்றும் போஷாக்கு

சிறுவர்களுக்குச் சிறந்த போஷாக்கினை வழங்குவதில் இலங்கை எப்போதும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தே வருகின்றது. கொவிட் 19 பெருந்தொற்று இந்த நிலையினை இன்னும் மோசமாக்கியுள்ளது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடிசனவரைபியல் மற்றும் சுகாதாரக் கணிப்பீட்டின் படி (DHSs), 5 வயதுக்குக் குறைவான பிள்ளைகளின் போஷாக்கு நிலை கடந்த காலங்களில் முன்னேற்றம் காணவில்லை. கடைசியாகக் கிடைத்த 2016 ஆம் ஆண்டிற்கான தரவுகளின் படி, 5 வயதுக்குக் குறைவான பிள்ளைகளில் எடை குறைவானவர்களின் சதவிகிதம் 2006/07 காலப்பகுதியில் 21 வீதத்தில் இருந்து 2016 ஆம் ஆண்டில் 20.5 வீதம் என மிகக் குறைவாகவே வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணக்கூடியதாக வுள்ளது. மேலும், 5 வயதுக்குக் குறைவான பிள்ளைகளில் 17 வீதமானவர்கள் குள்ளமானவர்களாக உள்ளனர். 21 வீதமானவர்கள் எடை குறைந்தவர்களாக உள்ளனர். 15 வீதமானவர்கள் அவர்களின் உயரத்திற்கு ஏற்ற பருமன் அற்றவர்களாக உள்ளனர். பெருந்தொற்றின் காரணமாகவும் பணவீக்கத்தினால் ஏற்பட்ட விலை அதிகரிப்பின் காரணமாகவும் குடும்பங்கள் வருமானத்தினை இழந்துள்ள காரணத்தினால் போஷாக்கில் மேலும் இழப்பு ஏற்படும் சாத்தியம் காணப்படுவதுடன் இது வறிய சமுதாயங்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கும். ஆரம்பப் பிள்ளைப் பராயத்தில் காணப்படும் மோசமான போஷாக்கு பிள்ளைகளின் மன மற்றும் உடல் விருத்தியினைப் பாதிக்கும்.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ள காரணத்தினால் 1.1 மில்லியனுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் அவர்களின் நாளாந்த இலவசப் பாடசாலை உணவினைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால், அவர்கள் போஷாக்கினைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் சவால்கள் மோசமாக்கப்பட்டுள்ளன. அதிகமான சந்தர்ப்பங்களில் இந்த உணவு இம்மாணவர்களின் போஷாக்குக்கான பிரதான மூலங்களாக அமைந்துள்ளதுடன் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனர் என்பதை உறுதிப்படுத்த விளிம்பு நிலையிலுள்ள சமுதாயங்களுக்கான ஓர் ஊக்குவிப்பாகவும் காணப்பட்டது.

**கொழும்பில் உள்ள தனியார் கம்பனியொன்றின் பௌதிகவள முகாமையாளரின் வாக்குமூலம் (ஆண், 34 வயது, பண்டாரவளை)**

*''எனது சகோதரனின் மகன் 2019 ஆம் ஆண்டு பாடசாலை செல்ல ஆரம்பித்தார். அவர் இப்போது இரண்டாம் தரத்தில் பயில்கின்றார். இவர்கள் பல விடயங்களை இழந்துள்ளனர். இவர்களுக்கு நடைமுறை அறிவு இல்லை. மேலும், பிள்ளை களின் நடத்தைகள் எதிர்மறையான விதத்தில் மாறிவிட்டன. தொழில்நுட்பத்துடனும் வேறு பல விடயங்களுடனும் நாம் முன்னேறியிருக்க வேண்டும். ஆனால், எதிர்மறையான தாக்கங்களுக்கான தீர்வுகளையும் நாம் காணவேண்டும். அது மிக முக்கியமானதாக இருக்கும்.''*

ஒன்லைன் கருவிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதுடன் சேர்த்து ஏனைய பிள்ளை களுடன் சமூக ரீதியான இடையீடும் இல்லாதிருப்பதால் பிள்ளைகளின் மத்தியில் மன அழுத்த மட்டங்கள் அதிகரித்து மனநலப் பிரச்சினைகளும் உருவாகியுள்ளன. பல பிள்ளைகள் தொழில்நுட்பத் திற்கு அடிமையாகியுள்ளனர். தங்களின் இயக்குதசையினைப் பயன்படுத்தி அப்பியாசங்களில் ஈடுபடாமல் தொழில்நுட்ப அடிப்படையிலான விளையாட்டுக்களை விளையாடுவதிலேயே சிறுவர்கள் நேரத்தினைச் செலவழித்து வருகின்றனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் காலிங்க சில்வா ஒரு இணையக் கருத்தரங்கின் போது (Webinar) இது பற்றிக் குறிப்பிடுகையில் ''சிறுவர்கள் இப்போது தொலைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையாகி யுள்ளனர். மக்கள் நீடித்த மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.'' ஸ்கிரீனில் நேரம் செலவழிப் பதில் துரித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

## *முடிவு*

கொவிட் - 19 பெருந்தொற்றின் போது சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிரான வன்முறையினைத் தணிப்பதற்காகப் பல சமுதாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் வீட்டு வன்முறையினைத் தணிப்பதற்குச் சமயத் தலைவர்கள் தன்முனைப்பான வகிபாத்திரத்தினை வகித்தல் போன்ற முன்னெடுப்புக்கள் உள்ளடங்குகின்றன.[5] சமூகத்தின் மீது பெருந்தொற்று ஏற்படுத்தும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கமும் சமுதாயமும் மேற்கொள்ளும் முயற்சிகள் மெச்சப்படவேண்டியதாக இருந்தபோதிலும் இந்தக் காலகட்டத்தில் சிறுவர்களும் குடும்பங்களும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளில் மிகச் சொற்பமானவற்றினை மட்டுமே நாம் காண்கின்றோம். பெருந்தொற்றின் போது சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்து அதற்கு பதிற்செயற்பாடாற்றுவதற்கு உபாயமார்க்கமிக்க திட்டங்கள் உருவாக்கப்பட்ட நியூசிலாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் சிறந்த உதாரணத்தினைக் கருத்திற்கொண்டு சிறுவர்களின் பாதுகாப்பிற்கு ஏற்படும் அபாயநேர்வினைக் குறைப்பதற்கு இலங்கையினாலும் இன்னும் அதிக விடயங்களை நிறைவேற்ற முடியும்.

பின்வருவனவற்றை உள்ளடக்கும் ஓர் உபாயமார்க்கத் திட்டம் இலங்கைக்கும் தேவைப்படு கின்றது:

- தயார்நிலை, தொடர்பாடல் தளங்கள் மற்றும் அபாயநேர்வுத் தணிப்பு உபாயமார்க்கங்கள் போன்றவற்றிற்குப் பங்களிப்பு வழங்கும் பல்துறைகளை (கல்வி, சுகாதாரம், சட்ட அமுலாக்கல், சமூகப் பணிகள் போன்றவை) ஈடுபடுத்துதல் மற்றும் இந்த நடவடிக்கை களுக்காகப் போதிய அளவு வளங்கள் ஒதுக்கப்படுதல்

- வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தடுப்பு மற்றும் பதிற்செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களையும் சேவைகளையும் திட்டமிடல். இதில் உள்ளடங்குபவை:

- மனநல ஆரோக்கியம், உளசமூக உதவி மற்றும் பாதுகாப்புச் சேவைகள்

- மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைத் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், ஆற்றுப் படுத்தல் சேவைகள் மற்றும் பாலியல் வன்புணர்வினை அடுத்து உடனடியாக வழங்கப்படும் பராமரிப்புச் சேவைகள் உள்ளிட்ட மருத்துவ சேவைகள்

- அனைத்து அத்தியாவசியத் தொழிலாளர்களுக்கும் கொடுப்பனவுடனான சுகவீன, மருத்துவ, குடும்ப விடுப்பு மற்றும் கட்டுபடியாகும் செலவுடனான பிள்ளைப் பராமரிப்பினை மேம்படுத்தல்

- பெருந்தொற்றின் போது சிறுவர்களுக்கு எதிராக வன்முறை நிலவுதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் நிலவுதல் பற்றிய பொதுமக்கள் தகவல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வன்முறையினைத் தடுத்து பதிற்செயற்பாடாற்றுவதற்குச் சேவைகள் கிடைக்கக்கூடியமை அல்லது வன்முறையினால் பாதிக்கப்பட்டு வாழ்பவர்களுக்கான சுய உதவி அல்லது சகபாடி உதவிக் குழுக்கள்

- வானொலி, தொலைக்காட்சி, ஒன்லைன், சுவரொட்டிகள், பலசரக்குக் கடைகள் அல்லது மருந்தகங்களில் வழங்கப்படும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் அறிவித்தல்கள் மூலமாகப் பொதுமக்களுக்குத் தகவல்கள் பரப்பப்படவேண்டும். மூன்று தேசிய மொழிகளிலும் தொடர்பாடலை அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். தொடர்பாடல் வடிவங்கள் செவிப்புலன் மற்றும் விழிப்புலன் அற்றவர்களினாலும் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும்.

- அஞ்சல் அலுவலர்கள், மானி வாசிப்பவர்கள், முதல் பதிற்செயற்பாட்டாளர்கள மற்றும் உணவு விநியோகிப்பவர்கள் போன்ற சமுதாயத்திலுள்ள அத்தியாவசிய சேவை வழங்குநர்களுக்கு வன்முறை அல்லது துஷ்பிரயோகம் நடைபெறுவதைச் சுட்டிக்காட்டும் அறிகுறிகள் பற்றி எச்சரிக்கை வழங்கி பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவி தேவைப்பட்டால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தெரிவிக்கப்படவேண்டும்

- மதுபானத்தினால், ஆயுதங்களினால், போதைப்பொருள் பாவனையினால் மற்றும் ஏனைய அடிமையாக்கும் நடத்தைகளினால் ஏற்படுத்தப்படும் தீங்கு உள்ளடங்கலாக வன்முறையுடன் இணைந்துள்ள அபாயநேர்வினை அடையாளம் கண்டு அதனைக் குறைப்பதற்குச் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் பயிற்றுவிக்கப்படவேண்டும்

- வன்முறையினால் பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டினை விட்டுப் பாதுகாப்பாக வெளியேற உதவி கேட்பவர்களுக்கு முழுமுடக்கத்தின்போது கூட வெளியேற அனுமதி வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்

- வழமையான தொலைபேசி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், அளவளாவல் (chat) அல்லது தவறவிட்ட அழைப்புக்கள் உள்ளடங்கலாக ஏற்கனவே உள்ள உதவிச் சேவைகளை இயங்கும் நிலையில் வைத்திருத்தல் அல்லது புதிய சேவைகளை உருவாக்கல். மேலும் தொலைபேசி மூலமாக வேண்டப்படும் மருந்துப் பொருட்களை வன்முறையினால் பாதிக்கப்பட்டு வாழ்பவர்கள் அனைவருக்கும் இலவசமாக விநியோகித்து அவர்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துதல்

- வன்முறைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக குற்றவியல் நீதி முறைமை, சுகாதார சேவைகள், சமூக சேவைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய பல்துறைசார் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை உருவாக்கல்

- முழுமுடக்க காலப்பகுதியில் அல்லது குவரண்டைன் காலப்பகுதியில் பராமரிப்பாளர் களுக்குப் பிள்ளைப் பராமரிப்புப் பற்றிய ஆலோசனைக் குறிப்புக்களை வழங்கி மன அழுத்தம் மற்றும் மனநலக் குறைபாடுகளைக் குறைப்பதற்கு சுயபராமரிப்பினையும் உத்திகளையும் ஊக்குவித்தல், புகையிலை, மதுபானம் அல்லது போதைப்பொருள் பாவனையினைத் தவிர்ப்பதற்காக சாதகமான ஈடுகொடுத்தல் உபாயமார்க்கங்கள், சமூக உதவி, பாதுகாப்புத் திட்டமிடல் மற்றும் உத்திகள் ஆகியவை மூலம் உதவுதல்.

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் அமுலாக்கலும், குறிப்பாகப் பெருந்தொற்றுக் காலப்பகுதியின்போது, மிக முக்கியமானதாகும். தற்போது கிடைக்கின்ற மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அனைத்து ஆய்வுகள் மற்றும் அனுபவ ரீதியான தரவுகளில் இருந்து சான்றாகக் காணக்கூடியதாக இருப்பது என்னவெனில், பெருந்தொற்றின் பாதகமான விளைவுகள் சமூகத்தின் சமூக, பொருளாதார வீச்சிலுள்ள சிறுவர்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கின்றன என்பதாகும். யார் தொற்றுக்கு உள்ளாகின்றனர் என்பதில் வைரஸ் பாரபட்சம் காட்டாதபோதிலும், வெவ்வேறு சமுதாயங்களின் மீதான மோசமான தாக்கங்களின் பரம்பல் பெருமளவுக்கு வித்தியாசப்படுகின்றது.

சமூகத்தில் ஏற்கனவே காணப்படும் சமத்துவமின்மைகளையும் பாதிப்புறுநிலைகளையும் கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலாக்கியுள்ளது. பெருந்தொற்றினால் சகல சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, சில சிறுவர் குழுக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இது வருகின்ற காலங்களில் அவர்களின் வாழ்க்கை வாய்ப்புக்களில் பாதிப்பினை ஏற்படுத்தும். சிறுவர்களே இலங்கையின் மிகவும் பெறுமதிமிக்க வளம். எனவே இலங்கையின் எதிர்கால சந்ததிகளைப் பாதுகாப்பதற்கு இன்னும் அதிகமானவை மேற்கொள்ளப்படவேண்டும்.

## மூலங்கள்

[1] Phakathi, Mantoe. Report Shows Sri Lanka has Escalation of Violence during COVID-19 Lockdown.IPS [Internet]. Available at http://www.ipsnews.net/2020/08/report-shows-sri-lanka-escalation-violence-covid-19-lockdown/

[2] 5891 child abuse cases reported from 2012 – 2020. News 1st [Internet]. Available at https://www.newsfirst.lk/2020/02/11/5891-child-abuse-cases-reported-from-2012-2020/

[3] UNICEF And NCPA Gravely Concerned By Increase In Proportion Of Child Cruelty Cases Reported to NCPA Hotline Since The Start Of The Covid-19 Curfew. UNICEF [Internet]. Available at https://www.unicef.org/srilanka/press-releases/unicef-and-ncpa-gravely-concerned-increase-proportion-child-cruelty-cases-reported

[4] Violence against children and adolescents in the time of COVID-19, United Nations ECLAC [Internet], December 2000, Available Athttps://www.cepal.org/en/publications/46486-violence-against-children-and-adolescents-time-covid-19

[5] Faith leaders join together to protect children during COVID-19, End Violence Against Children [Internet],14th April 2020, Available At https://www.end-violence.org/articles/faith-leaders-join-together-protect-children-during-covid-19

## ஆதாரங்கள்


Social Policy and Child Rights Monitoring.UNICEF[Internet]. Available at https://www.unicef.org/srilanka/social-policy-and-child-rights-monitoring

COVID-19 and Children's Rights.OHCHR.[Internet].Available at https://ohchr.org/EN/Issues/Children-OHCHR/Pages/COVID19Children.aspx

UN Advisory paper:Immediate Social Economic Response to COVID 19 in Sri Lanka, UN sustainable development group [Internet]. July 2000, Available at https://unsdg.un.org/resources/un-advisory-paper-immediate-socio-economic-response-covid-19-sri-lanka

The Situation of Children in Sri Lanka. UNICEF [Internet] 2021, Available at https://www.unicef.org/srilanka/situation-children-sri-lanka

The Impact of Covid-19 on Women and Girls with Disabilities: A global assessment and case studies on sexual and reproductive health and rights, gender-based violence, and related rights,Save the Children [internet] 2021. Available At: https://resourcecentre.savethechildren.net/library/hidden-impact-covid-19-children-global-research-series

COVID-19 and Burden of Child Under-nutrition in Sri Lanka. Daily Mirror [Internet]. July 2, 2021, Available at https://www.dailymirror.lk/editorialbusiness/COVID-19-and-burden-of-child-undernutrition-in-Sri-Lanka/340-215245

Children Fall Prey to the Invisible Pandemic. Daily Mirror [Internet]. Dec 25, 2020, Available at https://www.dailymirror.lk/medicine/Children-fall-prey-to-the-Invisible-Pandemic/308-202512

New Births Decrease due to COVID: Indigenous Medicine State Minister. Daily Mirror [Internet]. July 16, 2021, Available at https://www.dailymirror.lk/latest_news/New-births-decrease-due-to-COVID-Indigenous-Medicine-State-Minister/342-216284

Beating 'Pandemic Depression.' Daily Mirror [Internet].July 16,2021, Available at https://www.dailymirror.lk/medicine/Beating-Pandemic-Depression/308-216250

Global Status Report on Preventing Violence against Children 2020.WHO [Internet],Available at https://www.who.int/teams/social-determinants-of-health/violence-prevention/global-status-report-on-violence-against-children-2020

5891 Child Abuse Cases Reported from 2012 – 2020. News 1st [Internet]. Feb 11, 2020, Available at https://www.newsfirst.lk/2020/02/11/5891-child-abuse-cases-reported-from-2012-2020/

*Weekly epidemiological report*,Epidemiology Unit: Vol.47, No.42. [internet] 10th t0 16th October 2020, Available at http://www.epid.gov.lk/web/images/pdf/wer/2020/vol_47_no_42-english.pdf

UNICEF and NCPA Gravely Concerned By Increase In Proportion Of Child Cruelty Cases Reported To NCPA Hotline Since The Start Of The Covid-19 Curfew. UNICEF [Internet], April 9, 2020, Available at https://www.unicef.org/srilanka/press-releases/unicef-and-ncpa-gravely-concerned-increase-proportion-child-cruelty-cases-reported

COVID-19 pandemic and school education Sri Lanka Journal of Child Health 2020; 49(3): 207-209 [Internet] Available At: https://drive.google.com/file/d/1Mi-htIz1IlY5IaaKlgtW4L61RqTRCtQ0/view?usp=sharing

Building a Crisis-Resilient Education System in Sri Lanka. Development Asia [Internet], June 28, 2021, Available at https://development.asia/insight/building-crisis-resilient-education-system-sri-lanka

Sri Lankan children make a dangerous climb for online school. Aljazeera [Internet]. Available At: https://www.aljazeera.com/gallery/2021/7/13/sri-lankan-children-make-a-dangerous-climb-for-online-school

LIRNEasia on access for all, women and work at the inaugural Sri Lanka Internet Day, LIRNEasia [Internet] 12th April 2021. Available At: https://lirneasia.net/2019/05/afteraccess-asia-report3/

Virtual Education, COVID-19 and Dumping of our Children – EDITORIAL. Daily Mirror.[Internet], Feb 1, 2021, Available at https://www.dailymirror.lk/opinion/Virtual-education-CoVID-19-and-dumping-of-our-children-EDITORIAL/172-204847

Internet Penetration Rate in Sri Lanka from 2010 to 2019. Statistica.com. [Internet], Mar 29, 2021, Available at https://www.statista.com/statistics/765516/internet-penetration-rate-sri-lanka/

No Online Education for 60% Students: Teachers. The Morning.[Internet], June 24, 2021, Available at https://www.themorning.lk/no-online-education-for-60-students-teachers/

Nutrition crisis looms as more than 39 billion in-school meals missed since start of pandemic – UNICEF and WFP. UNICEF. [Internet], Feb 1, 2021, Available at https://www.unicef.org/srilanka/press-releases/nutrition-crisis-looms-more-39-billion-school-meals-missed-start-pandemic-unicef-and